This article is published under the Creative Commons CC-BY-ND License (http://creativecommons.org/licenses/

# Aesthetic Aspects of Reetmats: A study Based on Formalism Theory

## பன்பாய் உற்பத்தியின் அழகியல் அம்சங்கள்: வடிவமைப்புக் கோட்பாட்டின் அடிப்படையிலான ஆய்வு

**திருமதி.பிரசாந்தி இளங்கோ.**
நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*Correspondence: ilangop@esn.ac.lk*
**பேராசிரியர்.வ.இன்பமோகன்.**
நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
*Correspondence: inpamohanv@esn.ac.lk*

*Submitted: 17.4.2025 Revised: 21.5.2025 Accepted: 10.6.2025*

### Abstract:

The origin of handicrafts and their development are connected to the origin and development of human society. The significant features of these creations have appeared from time to time and developed as theories. One of these theories is the *theory of formalism.* In this theory, the artistic value of a creation is said to depend only on forms. Handicrafts are another aspect that has developed in parallel with the arts. Considering the need for usage, throughout the years, crafts have been created using various raw materials. Of these, products created using reeds as raw materials are included in reed handicrafts, where reed mats have become very significant. The techniques and the decorations used in the making of these reed mats create an artistic aspect. Thus, handicrafts go beyond usage, entering the domain of artistic view. The reed mat products of Batticaloa consist of aspects that enrich the artistic values and decorative techniques. The relevance of matching their art with the theory of formalism forms the research problem of this study. The reed mat handicrafts of Batticaloa have not been viewed from the point of artistic-related theory so far. In this context, the objectives of this study consist of explaining the characteristics of artistic handicrafts in the background of artistic theory, revealing the reed handicraft products of Batticaloa, and, in addition, viewing reed handicraft creations based on the *theory of formalism.* As this study deals with handicraft creations, qualitative methodology is used in this study. Direct observations and interviews from field studies are used as primary data while research studies, magazines and website articles are used as secondary data. This study also attempts to explain the practical aspects of handicraft on the basis of artistic theory. The conclusion made from this study is that reed material products basically consist of the characteristics of *formalism.*

**Key words**

Theory of Formalism, handicraft, reed mats, decorations.

**ஆய்வு சுருக்கம்**

கலை, கைவினைகளின் தோற்றமும் வளர்ச்சியும் மனித சமூகத்தின் தோற்றம் வளர்ச்சியுடன் தொடர்புடையது. இப்படைப்புகளின் சிறப்பம்சங்கள் கோட்பாடுகளாய் காலத்திற்குக் காலம் தோன்றி வளர்ந்து வந்துள்ளன. இக்கோட்பாடுகளுள் வடிவவாதமும் ஒன்று, படைப்பொன்றின் அழகியல் பெறுமானம் வடிவங்களில் மட்டுமே தங்கி உள்ளது என்பதைப்பற்றி இக்கோட்பாட்டில் பேசப்படுகின்றது. கலைகளுக்கு நிகராக வளர்ச்சிகண்ட இன்னொரு அம்சமே கைவினைகள். காலந்தோறும் பயன்பாட்டுத் தேவைகருதிப் பலவித மூலப்பொருட்களைப் பயன்படுத்திக் கைவினைப் பொருட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் பன்புல்லை மூலப் பொருளாகக் கொண்டு உருவாக்கப்படும் பொருட்கள் பன்கைவினைப் பொருட்களிலடங்கும். இவற்றில் பன்பாய்கள் முக்கியமானவை. இப்பன்பாய் உருவாக்கத்தில் கையாளப்படும் நுட்பங்களும், அலங்காரங்களும் பன்கைவினைகளில் கலையம்சத்தைத் தோற்றுவிக்கின்றன. இதனால் இவை பயன்பாட்டைத் தாண்டி கலை அழகியல்சார் பார்வைக்குள் நுழைகின்றன. அழகியல் பெறுமானங்களையும், அலங்காரநுட்பங்களையும் மேம்படுத்திக் காட்டும் தன்மையை மட்டக்களப்பின் பன்பாய் கைவினைப் பொருட்கள், தமக்குள் கொண்டிருக்கின்றன. இவற்றின் அழகியலை வடிவமைப்புக் கோட்பாட்டுடன் பொருத்திப் பார்ப்பது எந்தளவு பொருத்தப்பாடானது என்பதே இவ்வாய்விற்குரிய பிரச்சினையாக அமைகிறது. மட்டக்களப்பின் பன்பாய் கைவினைப் பொருட்கள், கலைத்தத்துவார்த்த கோட்பாட்டு ரீதியாக இதுவரை பார்க்கப்படவில்லை. இதன்கீழ் கலை, கைவினைப் பண்புகளைக் கலைக்கோட்பாட்டுப் பின்னணியில் விளக்குதல், மட்டக்களப்பின் பன்பாய் கைவினையை வெளிப்படுத்துதல், வடிவவாத கோட்பாட்டின் அடிப்படையில் பன்பாய் கைவினைப் படைப்புகளைப் பார்த்தல் என்பன இவ்வாய்வின் நோக்கங்களாக அமைகின்றன. இவ்வாய்வு கைவினைப் படைப்புகள் பற்றியதாக அமைந்ததால் இங்கு பண்புசார் ஆய்வுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வில் முதல்தர மூலங்களாக களஆய்வின் நேரடி அவதானம்,

நேர்காணல் தகவல்கள் என்பனவும் இரண்டாம்தர தரவுகளாக ஆய்வுகள், சஞ்சிகைகள், வலைதளக் கட்டுரைகள் என்பனவும் அடங்குகின்றன. இந்த ஆய்வு கைவினைசார் நடைமுறை விடயங்களை கலைக்கோட்பாடுசார் அடிப்படையில் விளக்க முற்படுகின்றது. பன்பொருள் பண்டங்கள், வடிவவாத பண்புகளையும் அதன் அடிப்படையில் கொண்டுள்ளன என்பதே இவ்வாய்வினுடாகக் கிடைத்த முடிவாகும்.

**திறவு சொற்கள்**

வடிவவாதம், கைவினை, பன்பாய்கள் அலங்காரங்கள்

**ஆய்வு பின்னணி**

மனித சமூகத்தில் கலைப்படைப்புகள் மற்றும் பண்டங்களின் தோற்றம் பற்றிப் பார்க்கின்றபோது, ஆரம்பத்தில் அவை கலைப்படைப்புகளாகத் தோன்றவில்லை. அவை படைப்புகளாக அல்லது சடங்குகளாகவே நிகழ்த்தப்பட்டுள்ளன. குகையோவியங்களில் காணப்படும் வேட்டைக் காட்சிகள் பாரம்பரிய சுவரோவியங்களாகக் கணிக்கப்பட்டாலும் அவை சடங்குகளுக்காகவோ அல்லது பயிற்சி பெறுவதற்காகவோ படைக்கப்பட்டவையே என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இவை ஒரு வகையில் கைப்பணிப் பொருட்கள் என்ற நிலையையே பெற்றிருந்தன.

இதன்பின் மனிதசமூகம் வேட்டை, வேளாண் சமூகம் எனும் நிலைகளை அடைந்தது. வேட்டைக்காலத்தில் கல்லாயுதங்கள் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளன. வேளான் சமூகத்தில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் பற்றிய ஆதாரபூர்வமான தகவல்கள் இல்லாவிட்டாலும், சூழலில் கிடைத்த களி, மணல் போன்ற அழியக்கூடிய மூலப்பொருட்களைப் பயன்படுத்திப் பொருட்கள் உருவாக்கப்பட்டிருக்கலாம். வேளாண்மைச் சமூகத்தைத் தொடர்ந்து விவசாய, மீன்பிடிச் சமூகங்களின் உருவாக்கத்தின் பின்புதான் ஓய்வும், மகிழ்ச்சியும் கிடைக்கின்றது. இந்த ஓய்வும் மகிழ்ச்சியான மனநிலையும் அழகான படைப்புகளினதும் நேர்த்தியான பாண்டங்களினதும் உற்பத்திக்கு வழிகோலியது.

காலப்போக்கில் நிறுவனமயப்பட்ட கல்வி வளர்ச்சியைத் தொடர்ந்து நுண்கலை எனும் விடயம் முக்கியம் பெறுகின்றது. ஆய்வுகளினதும் ஆராய்ச்சிகளினதும் விளைவாகக் கலைகளிலிருந்து கைவினைகள் வேறுபிரித்துப் பார்க்கப்பட்டன. ஆனால் இந்த வேறுபாட்டில் கலை, கைவினைகளுக்கிடையில் நூலிழையான வேறுபாடே காட்டப்பட்டது. பயன்பாட்டுத் தேவைகருதி உருவாக்கப்பட்ட பாவனைப் பொருட்கள் பல காலப்போக்கில் அவற்றின் அலங்காரவேலைப்பாடுகளின் உயர்தரமான அழகியல் பெறுமானங்கள் காரணமாகக் கலைப் பொருட்களாகக் கொள்ளப்பட்டமையே இந்த நூலிழைவேறுபாட்டிற்குக் காரணமானது. இதனால் 'எது கலை?' என்பதிலும் பார்க்க 'ஒரு பொருள் எப்போது கலையாகின்றது?' என்பதே பொருத்தமானது எனும் வாதங்கள் முன்வைக்கப்பட்டன. இதனால் கலை, கைவினை என்பவற்றை அழுத்தமான கோடுகளால் பிரித்துக்காட்ட முடியாத தன்மை காணப்பட்டது.

ரசனைக்குரிய அடிப்படையான விடயமாக 'அழகு' கொள்ளப்பட்டது. இதனடிப்படையில் நுகர்வோரின் ரசனைத் துாண்டி, நுகர்வை ஊக்குவிக்க கைவினைப் பொருட்கள் கவர்ச்சியுடனும் நேர்த்தியுடனும் படைக்கப்பட்டன. கைவினைப் பொருட்களின் உருவாக்கத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கென்று தனித்துவமான பண்பாடு உண்டு. மட்டக்களப்பு மாவட்டம் பல்வகைமை நிலவளங்களைக் கொண்ட பிரதேசம். இங்கு ஒவ்வொரு வகை நிலங்களிலும் கிடைக்கும் வளங்களைக் கொண்டு வாழ்வியல் தேவைகளுக்கான பலவிதமான கைவினைப் பொருட்கள் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் உற்பத்திசெய்யப்படும் கைவினைகளாகப் பனைசார் கைவினைகள், மட்பாண்டங்கள், தும்பு, பிரம்பு, ஆபரணங்கள், நெசவு, மரவேலை, பன் போன்றன கொண்டு உருவாக்கப்படும் பொருட்கள் சிலவற்றை எடுத்துக்காட்டலாம்.

இவற்றில் பன்சார் கைவினைகள் முக்கியமானவை. கரையோரப் பிரதேசமான மட்டக்களப்பு மாவட்டம் நீர்நிலைகளை அதிகளவு கொண்டது. இவற்றில் சதுப்பு நிலப்பகுதிகளில் வளரக்கூடிய ஒருவகைப் பூக்கும் புல்லினமே பன்புல். இதன் தாவரவியல் பெயர் தை.:.பா அன்குஸ்ரிபோலியா( Typha Anguistifolia) . சதுப்பு நிலங்களில் பன்கிழங்கை நட்டு அதன்மூலமே இப்புல்லினம் உற்பத்தி செய்யப்படுகின்றது. பன்புல் வள்ர்க்கப்படும் இடம் 'பன்வயல்' அல்லது 'பன்காலை' எனப்படுகின்றது. பன்புற்கள் குறைந்தது 2' – 5'வரை உயரமாக வளரக்கூடியவை. மூன்று மாதங்களுக்கொருமுறை மழையைப்பார்த்து அறுவடை செய்யப்படுகின்றது. அறுவடை செய்யப்பட்ட புல் தரப்படுத்தப்பட்டு, காயவிடப்பட்டு, வர்ணநீரில் அவித்து அழகு சேர்க்கப்பட்டு, பருத்திமனையில் இட்டு பதப்படுத்தப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் கைகளால் இயக்கக்கூடிய பருத்திமனையே பயன்பாட்டிலிருந்தது. தற்காலத்தில் மின்சாரத்தில் இயங்கக்கூடிய இயந்திரத்தில பன் பதப்படுத்தப்படுகின்றது.

இப்பன்புல்லைக் கொண்டு பாய், தொப்பி, கூடை, பைகள், அகப்பை கொழுவி, குட்டான், உமல், தட்டு, கூடைகள், பூச்சாடிகள், பூக்கூடைகள், சுவரலங்காரங்கள் போன்ற பயன்பாட்டுப் பொருட்கள் உருவாக்கப்படுகின்றன. இவற்றின் அழகு மேம்பாட்டுக்காக வெறுமனே பதப்படுத்தல் மட்டுமில்லாமல் வர்ணங்களும் அவற்றின் பிரயோகமும் கூட முக்கியம் பெறுகின்றது. எதிர்வர்ணங்களை அதிகமாகப் பயன்படுத்தி இரசனையை ஏற்படுத்தும் வகையில் இவை தயாரிக்கப்படுகின்றன. இவற்றின் அழகினை மேலும் மெருகூட்டுவது இவற்றில் பயன்படுத்தப்படும் அலங்கார வடிவங்களாகும். கோட்பாட்டினடிப்படையில் நோக்கினால் இவை வடிவவாத உள்ளடக்கத்தைக் கொண்டு காணப்படுகின்றன.

கலைகள் பற்றிய கற்கைப் புலத்தில் மேலைத்தேய கலைகள் பற்றிய உயர்தரமான கணிப்பீட்டிற்கு காரணம் அவை பெரும்பாலும் கலைக் கோட்பாடுகளின் தளத்தில் நின்று உருவாக்கப்படுவதேயாகும். கலை வரலாற்றில் புதிய கலைப் பாணிகளின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் கலைக்கோட்பாடுகள் முக்கிய பங்காற்றியுள்ளன. காலத்திற்கு காலம் கலையுலகில் சமூகத் தேவைகளினதும், கலைஞர்களின் புதிய தேடல்களினதும் விளைவாகப் பல கலைக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டு வளர்ச்சியடைந்துள்ளன. மனப்பதிவுவாதம், வெளிப்பாட்டுவாதம், குறியீட்டுவாதம், கேத்திரகணிதவாதம், அகவயயதார்த்தவாதம், எதிர்காலவாதம் அரூபவாதம், எளிமைவாதம், கட்டமைப்புவாதம், அமைப்பியல்வாதம், இயங்கியல்வாதம் போன்றன இக்கலை தத்துவார்த்தக் கோட்பாடுகளுக்கான சில எடுத்துக்காட்டுகளாகும்.

இக்கோட்பாடுகளில் பெரும்பாலானவை, கலைகளை அகவய ரீதியாக மதிப்பீடு செய்வதால் இவற்றின் பெறுபேறுகளில் ஒரு நேர்கோட்டுத் தன்மையை காண முடியாதுள்ளது. இத்தகைய சிக்கல்களின் மத்தியில் கலைப் படைப்புக்களை அகவயமான அழகியல் ரீதியாக அணுகாமல் அவற்றின் புற அலகுகளான அமைப்பு, வர்ணம், வடிவம், அளவுத்திட்டம், போன்றவற்றை

சீர்தூக்கி ஆய்வு செய்யும் புறவயரீதியான ஆய்வு முறைகள் முனைப்பு பெற தொடங்கிய காலத்தில் உருவாக்கப்பட்ட கலை கோட்பாடாக வடிவவியலைக்(Formalism) கருதமுடிகின்றது(Noel Carroll.2005) இக்கோட்பாட்டின்படி படைப்பின் அழகியல் பெறுமானம் என்பது தனியே வடிவத்தில் மாத்திரமே தங்கியுள்ளது என்பதாகும். வடிவவாதிகள் தனியே ஒருகலைப்படைப்பின் அரூபப் பண்புகள் அல்லது அதன் வடிவ விடயங்களுக்கு மாத்திரமே முக்கியத்துவம் வழங்குவர். இங்கு கோடுகள், வர்ணம், வடிவம் நேர்த்தி எனும் காண்பிய அம்சங்களின் ஒழுங்குபடுத்தலுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். இதில் கலைஞரும் அதனை நுகர்வோரும் கலைப்படைப்பின் வடிவம் என்பதனை மட்டுமே கருத்தில் கொள்வர்.

வடிவமைப்புக் கலைக்கோட்பாடு தர்க்கநிலைப்படுத்தும் இந்த அழகியல் கூறுகளுக்கு நிகராக இன்று பன்கைவினைப் பொருட்களில் உருவாக்கப்படுகின்ற அலங்கார வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. பன்கைவினையாளர்கள் தமது உற்பத்திகளை அலங்கரிக்கப் பயன்படுத்தும் நிறங்கள், அளவுத் திட்டங்கள், அலங்காரங்கள், இவற்றின் ஒத்திசைவுகள் என்பன வடிவவியல் கோட்பாட்டுத் தளத்தில் கைவினைகளைப் பொருத்தி பார்க்கக் கூடிய ஏதுநிலையை உருவாக்கியுள்ளன. பன்பாய் கைவினைப் பொருட்கள் எவ்வாறு வடிவம் சார்ந்து அழகுணர்ச்சியைத் தருகின்றன? கோட்பாட்டினடிப்படையில் இவ்வியாக்கியானம் சாத்தியமாகுமா? என்பது இங்கு ஆய்வுப்பிரச்சினைகளாக முன்மைக்கப்பட்டுள்ள நிலையில் ஆய்வு மீளாய்வின் முடிவில் இதன் தார்ப்பரியத்தை அறிந்துகொள்ள முடியும். கலைகள், கைவினைகள் தொடர்பாக பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் குறிப்பாக பன்சார் கைவிகைகளைக் கலைக்கோட்பாட்டுத்தளத்தில் வைத்து ஒப்பீடு செய்வது தொடர்பாக எவ்வித ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதால் இனங்காட்டப்படும் ஆய்வு இடைவெளியினை நிவர்த்தி செய்யும் வகையில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

மட்டக்களப்பு பன்பாய் பொருட்களின் அமைப்பும், அவற்றில் காணப்படும் அலங்காரங்களும், வடிவமைப்பு நுட்பங்களும் அவற்றின் அழகியலை மேம்படுத்திக் காட்டுகின்றது, என்பதனை வடிவமைப்புக் கோட்பாட்டு முறையில் பார்ப்பது எந்தளவு பொருத்தப்பாடுடையது என்பதே இவ்வாய்விற்குரிய பிரச்சினையாக அமைகிறது.

**ஆய்வு நோக்கங்கள்**

கைவினையின் பண்புகளைக் கலைப் படைப்புகளின் பின்னணியில் விளக்குதல், மட்டக்களப்பின் பன்சார் கைவினைப் பொருட்களை விளங்கிக் கொள்ளுதல், இக்கைவினைப் படைப்புக்களை வடிவவாத கோட்பாட்டு அடிப்படையில் ஆராய்தல் என்பன இவ்வாய்வின் நோக்கங்களாக அமைகின்றன.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது கலை கோட்பாடுகளின் பின்னணியில் கைவினைகள் பற்றியதாக அமைவதால் இங்கே பண்புசார் ஆய்வுமுறை(Quantitative research method) பயன்படுத்தப்படுகின்றது. வடிவவாத கோட்பாட்டின் பண்புகள் பன்கைவினை நுட்பங்களுடன் பொருத்திப் பார்க்கப்படுவதால் இங்கே ஒப்பிட்டு ஆய்வு அணுகுமுறையும் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாய்வுக்கான முதலாம் தரமூலங்களாக(Primary Data) கள ஆய்வின்போது பெறப்பட்ட அவதானம், நேர்காணல் என்பனவும், இரண்டாம் தர மூலங்களாக(secondary Data) ஆய்வுகள், சஞ்சிகைகள், வலைத்தளக்கட்டுரைகள் மூலம் பெறப்பட்ட தகவல்களும் அடங்குகின்றன.

**ஆய்வு மீளாய்வு**

ஆய்வொன்றினை வலுவுடையதாக அமைத்துக் கொள்வதற்கு அவ்வாய்வுப் பிரச்சினை தொடர்பான ஆய்விடைவெளியை கண்டறிந்துகொள்வது அவசியம். ஆய்வு இடைவெளியானது ஆய்வு மீளாய்வு மூலமே கண்டறியப்படலாம். இதற்காகக் கைவினைகள் தொடர்பாகவும், வடிவவாதம் தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் தேடப்பட்டு அவை தொடர்பான மீளாய்வு பெறப்பட்டது. பன்பாய்கள் தொடர்பான ஆய்வுகள் குறிப்பிடத்தக்களவு இடம்பெறவில்லை. ஆனால் சில விபரிப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடிவவாதம் பற்றிய சில ஆய்வுகள் இடம் பெற்றிருக்கின்றபோதும் அவை கோட்பாட்டியல் தொடர்பாகப் பேசுகின்றதே தவிர கைவினைகளுடன் தொடர்புபடுத்தப்படவில்லை. எனினும் குறிப்பிடத்தக்க முக்கியமான ஆய்வுகள் இங்கு எடுத்துக்காட்டப்படுகின்றன.

இலங்கையின் கைவினை பற்றிய ஆய்வுகள் சுற்றுலாத்துறையையும், பொருளாதார மேம்பாட்டையும் மையப்படுத்தியே எழுந்துள்ளன. இவ்வாய்வுகளில் Isuru Koswatte என்பவரின் ஆய்வு முக்கியமானது( Isuru Koswatte:2024). இவர் அதிகரித்துவரும் நுகர்வுத்தேவை காரணமாக கைவினைப் பொருட்களின் தேவை அதிகரித்திருப்பதையும், சந்தைகள் விரிவடைந்திருப்பதையும் பற்றிப் பேசுகின்றார். நாட்டிற்கு வருமானத்தை ஈட்டும் துறையாக கைவினைகளை வளர்த்தெடுப்பது பற்றிய பொருளாதாரக் கண்ணோட்டமாகவே இவ்வாய்வு அமைகின்றது. இங்கு கைவினைகளின் அழகியல் பற்றியோ அவை தொடர்பான கலைக் கண்ணோட்டமோ இடம்பெறவில்லை.

Annemari de Silva தன்னுடைய ஆய்விலே (Annemari de Silva: 2019') கைவினைப் பொருட்களைப் பாதுகாப்பது பற்றியும் அதற்கான அரசகொள்கைகள், ஆதரவுகள், கடன்திட்டங்கள் பற்றியும், கைவினைத் துறைகளிலுள்ள கொள்கைகள், நடைமுறைகள் பற்றியும் ஆராய்கின்றார். மற்றும் கைவினைகளைச் சந்தைப்படுத்தல், டிஜிட்டல் சந்தை வாய்ப்புக்களை உருவாக்குதல், இவை தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் அவரது ஆய்வுப்புலம் விரிகின்றது. இங்கு கைவினைகளின் அழகியல், அலங்காரங்கள் பற்றிய குறிப்புகள் பேசப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கிராமியப் பொருளாதார அபிவிருத்தியில் பாரம்பரிய தொழில் நிறுவனங்களின் பங்களிப்புப் பற்றியும், வளர்முக நாடுகளின் பொருளாதாரத்தில் கைவினைகளே முதுகெலும்பு என்பதையும் வணிகரீதியாக ஆராய்கின்றனர் T.L.Navaratne, R.M.A.K. Ratnayake ஆகிய இருவரும்(T.L.Navaratne & R.M.A.K. Ratnayake:2015') இவைதவிர கைவினைகளின் அழகியல் பற்றி இவ்வாய்வாளர்கள் கவனம் செலுத்தவில்லை.

Bohingamuwa (2023)தனது ஆய்வில் தும்பர கைவினைகள் மற்றும் அக்கலைஞர்களின் முக்கியத்துவம், அக்கைவினை தொடர்பான செய்முறைகள், அதன் சமகால சமூக மாற்றங்கள் என்பனவற்றிற்கே முக்கியமளிக்கின்றார். பாய்களின் அழகியல் பற்றித் தொட்டுச் சென்றாலும் அதன் வரலாற்றையும் வளர்ச்சியையும் பதிவுசெய்யும் நோக்கமே இவரது ஆய்வில் மேலேழுந்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட ஆய்வு மகாநாட்டின் ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய பதிப்பிலே,

Cresside Collett என்பவர் எழுதிய Craft as Fine Art எனும் கைவினை சார்ந்த ஆய்வுக் கட்டுரையில் கைவினைகளைக் கலைகளாகப் பார்ப்பதற்கான வழிமுறைகள் அடித்தளமிடப்பட்டுள்ளன. கைவினைப் பொருட்களைக் கலையென வரையறுக்க முடிந்தாலும் எல்லாக் கைவினைகளையும் அவ்வாறு கொள்ள முடியுமா என வினா எழுப்பப்பட்டுள்ளது. ஆனாலும் கலைக் கோட்பாடுகளின் தளத்தில் வைத்து கைவினைகளை அராய்ந்து அவற்றின் அழகியல் தன்மைகள் பேசப்படவில்லை.(சனாதனன், ஆயிஷா அப்துர் ர.ஃமான்:2018)

காலனித்துவக் கருத்தியல்கள், காலனித்துவக் கருத்தியலுக்குள் பழங்குடியினரின் கலைகள், பின்காலனித்துவமும் கலைகளும் என்பன பற்றி வடிவேல் இன்பமோகன் ஆராய்கின்றார்(மொழிதல்:2018) கலை, கைவினைகளை கலைக் கோட்பாட்டுத்தளத்தில் ஆராயும் முயற்சி இங்கு இடம்பெற்றிருக்கின்ற போதும் பழங்குடியினர் கலைகளே இங்கு பிரதானமாக ஆய்வுக்குட்படுகின்றது. அதற்குமேலாக பன்சார் கைவினை வடிவங்கள் பற்றிய விபரிப்புக்கள் இவ்வாய்வின் இடைவெளியாகவே உள்ளன,

இவை தவிர பல்கலைக்கழக மாணவர்களால் கைவினைகள் தொடர்பாக இதுவரை செய்யப்பட்ட ஆய்வுகளும் ஆய்வு மீளாய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. பாக்கியராஜா ஜெயராணி (2002) அவர்களின் ஆய்வில் கைவினைப் பொருட்களின் கலைத்துவமும் பற்றிப் பேசப்படுகின்றபோதும் அவை கலைக் கோட்பாட்டியல் ரீதியாக நிறுவப்படவில்லை. ரேவதி இராஜரெட்ணம்(2007) என்பவர் தனது ஆய்வினூடாகப் பனையோலைசார் கைத்தொழில் முயற்சிகள் பற்றிப் பேசுகின்றபோதும் அவை கலைக்கோட்பாடுகளுடன் தொடர்புபடுத்தப்படவில்லை. அத்துடன் பெண் தொழில்முனைவோரின் தொழில்சார்ந்த வெளிப்பாடுகள், அவர்களின் தொழிற்திறமையை ஊக்குவித்தல். ஆகிய விடயங்களுக்கே இவ்வாய்வில் முக்கியமளிக்கப்பட்டுள்ளது. கந்தசாமி சசிதரன்(2005) தன் ஆய்வில் மட்டக்களப்பின் கோறளைப்பற்றுத் தெற்குப் பிரதேச செயலகப்பிரிவின் கலை, கைவினைகள் பற்றித் தனித்தனியாகப் பேசப்படுகின்றாரே தவிர கைவினைகளைக் கலைத்தளத்தில் நின்று பார்க்கும் முயற்சிகள் இவரது ஆய்வுப்பரப்பில் இடம்பெறவில்லை. சறோசாதேவி நாராயணபிள்ளை(1991) யின் ஆய்வில் மட்டக்களப்பு ஆய்வுப் பிரதேசமாகக் கொள்ளப்பட்டுள்ள போதும் கைவினைகளைப் பொறுத்தவரை இங்கு பனம்பொருள் கைவினைகள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

எனவே கைவினைகள், அவற்றின் கலையம்சங்கள் தொடர்பாக இதுவரை செய்யப்பட்டுள்ள ஆய்வுகளில் பெரும்பாலானவை கைவினைகளின் தொழில்முனைவு, அவற்றின் வளர்ச்சிப்போக்கு, உருவாக்கல் பொறிமுறைகள், கலைத்துவநோக்கு என்பவற்றையே விபரித்துள்ளன. இந்தத் தளத்தில் பன்சார் கைவினைகளைக் கலைத் தத்துவார்த்தக் கோட்பாடான வடிவவியல் கோட்பாட்டின் அடிப்படையில் ஒப்பீடு செய்யப்பட்டு ஆய்வு செய்யப்படும் இவ்வாய்வானது கலை, கைவினை பற்றிய ஆய்வுப் பரப்பில் வெற்றிடமாயுள்ள பல இடைவெளிகளை நிரப்புகின்றது எனும் வகையில் முக்கியமாகின்றது.

## கண்டுபிடிப்பும் பெறுபேறுகளும்

### கலையும் அழகியலும்

கலை பற்றிய ஆய்வில் ஈடுபடுபவர்கள் விடைகாண சிரமப்படும் வினாக்களுள் முக்கியமானது ‘கலை என்றால் என்ன? என்பதாகும். ஏனெனில் கலை பற்றி எல்லாக் காலத்திற்கும், எல்லாச் சமூகத்திற்கும் பொருத்தமான வரைவிலக்கணத்தை வழங்குவது முடியாத காரியமாகும். ஒருவர் கலை என்றால் என்னவென்று வரைவிலக்கணம் தருகிறார் எனக் கொண்டால், நாளை அந்த வரைவிலக்கணத்தை மீறும் கலைப்படைப்பொன்றை பிறிதொரு கலைஞன் உருவாக்கலாம், என்பது நடைமுறையில் சாத்தியம் என்பதால், கலை என்ற சொல் ஒரு திறந்த எண்ணக்கருவாகின்றது.

கலைப்படைப்பாகக் கருதி உருவாக்கப்படாத பொருள்கள் பல இன்று கலைப்படைப்புகள் என வியந்து போற்றப்படுகின்றமையை அரும்பொருட் காட்சி சாலைகளில் நாம் கண்டுகொள்ள முடியும். கடந்த நூற்றாண்டின் பாவனைப் பொருட்கள் பல, ‘கலைப்படைப்புகள்’ என்ற கௌரவத்தை இந்நூற்றாண்டில் பெற்றுள்ளன. மனித உழைப்புத் திறனால் உருவாக்கப்பட்ட அனைத்து பொருட்களையும் கலைப்படைப்பாக கருதும் நிலைமையே இன்று பெரிதும் காணப்படுகின்றது என நெல்சன்குட்மன்(Nelsangudman) வாதிடுவதும் குறிப்பிடத்தக்கது(மேற்கோள்.கிருஷ்ணராஜா.2008).

கலை என்றால் என்ன எனும் கேள்வி உண்மையில் ‘எது கலையாகக் கருதப்படுகிறது என்பதைச் சுட்டுகின்றது. ஒருவிடயத்திற்கு கலையின் அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமா இல்லையா என்பது அவ்விடயத்திலேயே தங்கியுள்ளது எனும் கோடன் கிரஹாமின் (Gordon Graham) கருத்து எச்சந்தர்ப்பத்திலும் எப்பொருளும் கலை எனும் அந்தஸ்த்தைப் பெறலாம் என்பதைக் காட்டுகின்றது.(2005:3)

ஸ்டீபன் டாவிஸ்( Stephen Davies) கலை பற்றிய கருத்துக்களை மேற்கோள் காட்டிக் குறிப்பிடும் கருத்து இவ்வாய்விற்கு முக்கியமாகின்றது. ‘ கலை என்பது பிரதிபலிப்பு அல்லது பிரதிநித்துவம்(பிளேட்டோ.1955),உணர்வுகளைப் பகிர்வதற்கான ஒரு ஊடகம்(டால்ஸ்டாய்.1995),உள்ளுணர்வு வெளிப்பாடு(குரோஸ் 1920), குறிப்பிடத்தக்கவடிவம்(பெல்.1914) எனப் பலவிதமாக வரையறுக்கப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்படாத விடயங்களையும் பிற கலைபற்றிய கருத்துக்கள் கூறும் விடயங்களையும் ஒருபடைப்பு கொண்டிருக்காத வேளையில் அப்படைப்பு தோல்வியடைந்ததாகக் கருதவேண்டியுள்ளது. சில இசை மற்றும் வர்ணம் பூசப்பட்ட கலைப்படைப்புகளும், விளம்பரங்களும் உணர்வுகளைத் தூண்டக்கூடியதாக அமைந்தாலும் அவை கலைப்படைப்புகள் அல்ல’ என்கின்றார். அதன் மூலம் கலைப்படைப்பொன்றுக்கு உணர்வுகளைத் தூண்டக்கூடிய தன்மை என்பது முக்கியமற்றது என்பதை முன்வைக்கின்றார்.(2005)

கலை பற்றிய இக்கருத்துக்கள் மூலம் கலைப் படைப்பொன்றின் பண்புகளை அறுதியிட்டுக் கூறமுடியாது என்பதும் எப்பொருளும் எக்காலத்திலும் கலை எனும் வரையறைக்குள் வரமுடியும் என்பதையும் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

### கலை அழகியல்

ஜேர்மன் தேசத்துக் கலைக் கொள்கையாளரான அலக்சாண்டர் பாம்காட்டன்(Alexander Baumgarten ) என்பவரே முதலில் Aesthetic எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். இவர் இயற்கை அழகோ, புறஅழகோ புலனுணர்வின் மூலமே பெறப்படுகின்றது என்கிறார்.(கிருஷ்ணவேணி.2008.)

அலன்கோல்ட்மன்(Alan Goldman) ‘அழகியலின் களம் அழகியல் ரீதியாக மகிழ்ச்சியூட்டும் கலைப்படைப்புகளை விட பரந்ததாகவே உள்ளது’ எனக் கூறுவதுடன் 1959 இல் ஃபிராங்க் சிப்லி எழுதிய கட்டுரையில் உள்ளபடி

அழகியலுக்கான பட்டியலில் சமநிலையான, அமைதியான,





சக்திவாய்ந்த, மென்மையான, உணர்ச்சிபூர்வமான, அழகான மற்றும் அலங்காரமான தன்மைகளைக் குறிப்பிடுகின்றார். அப்பண்புகள் காலப்போக்கில் கேள்விக்குட்படுத்தப்பட்டதையும் இவர் சுட்டிக்காட்டுகின்றார். இது அழகியல் பற்றிய திட்டவட்டமான தீர்மானத்தை உருவாக்குவதில் உள்ள முரண்நிலைகளை விளக்குகின்றது. இதனால் காலங்காலமாக இதுதான் அழகியல் அனுபவம் என எவராலும் சுட்டிக்காட்ட முடியாது. இது நபருக்கு நபர் வேறுபட்ட அனுபவத்தைக் கொண்டதாகவே காணப்படுகின்றது.(Berys Gaut and Dominic Mclver Loopes.2005)

**மட்டக்களப்பின் பன் கைவினைமரபு**

'கைவினை' என்பதற்கு ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி(Oxford dictionary), 'கைகளால் பொருட்களை செய்வதில் சிறப்பு தன்மையை உள்ளடக்கிய ஒரு செயற்பாடு' என விளக்கம் தருகின்றது. அதேவேளை கேம்பிரிடஜ் அகராதி (Cambridge dictionary) 'பொருட்களை உருவாக்குவது தொடர்பான திறன்கள் மற்றும் அனுபவமே கைவினை' என விளக்கம் தருகின்றது. கைவினை என்பது 'சிறப்பு தேர்ச்சி மிக்க செயற்பாடு' என்கின்றது லோக்மேன் (Longman dictionary ) அகராதி.

கைவினைகளின் சிறப்பிக்கும் தனித்துவத்திற்கும் முக்கிய காரணமாக விளங்குவது அதில் மனிதத் திறனும், உடலுழைப்பும் மேலோங்கி காணப்படுவதாகும். கைவினை என்பது பாரம்பரியமாக அல்லது பொழுதுபோக்காக உருவாக்கப்படும் உற்பத்தியாகும். இதனை உற்பத்தி செய்ய திறமையான தொழிலாளர்கள் தேவை. வரலாற்று ரீதியான கைவினைப் பொருட்கள், தனித்துவமான கைவினைத் திறனுடைய கைவினைஞர்களால் உருவாக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் கைகளால் உருவாக்கப்படும் பண்பு ஏனைய உற்பத்திகளில் இருந்து இதனை வேறுபடுத்துவதுடன் தனித்துவத்தையும் வெளிப்படுத்துகின்றது(Art vs Craft:2021).

இவ்வாறு தனித்துவமான உருவாக்கல் பண்புகளுடன் மட்டக்களப்பில் உற்பத்தி செய்யப்படும் கைவினை மரபுகளிலொன்றே பன்கைவினை உற்பத்திகளாகும். இயற்கை வளங்கள் நிறைந்த மட்டக்களப்பில் பலவிதமான கைவினை உற்பத்திகள் இடம் பெறுகின்றன. அவற்றில் வாழைச்சேனை, நாவற்குடா, தாழங்குடா, குருக்கள்மடம், செட்டிபாளையம், களுதாவளை, ஓந்தாச்சிமடம், கல்லாறு, காத்தான்குடி, ஒல்லிக்குளம், காங்கேயனோடை, பாலமுனை, பூநொச்சிமுனை, ஏறாவூர், மீராவோடை, செம்மண்ணோடை, காவத்தமுனை போன்ற பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் பன்சார் கைவினை உற்பத்திகள் முக்கியமானவை.

மட்டக்களப்பில் ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை பயன்பாட்டிலுள்ள கைவினை மரபாகப் பன்கைவினை காணப்படுகின்றது. ஆரம்பகாலத்தில் பன்பாய், கோரைப்பாய், பனையோலைப்பாய், ஈச்சம்பாய், மூங்கில்பாய் போன்றவை உபயோகத்திலிருந்துள்ளது. இவற்றுள் காலநீடிப்பிற்கும் நின்றுழைக்கும் பாயாக பன்பாய்களே காணப்படுகின்றன. உடல் உஷ்ணம், மூலநோய் போன்றவற்றால் அவதிப்படுவபர்களின் உடல் உஷ்ணத்தைத் தணிப்பதற்கு இப்பாய்கள் பெரிதும் உதவுகின்றன. பன்னினால் பலவகைப் பொருட்கள் தயாரிக்கப்பட்டாலும் பாய்களுக்கான கேள்வியே இன்றுவரை நிலவிவருகின்றது. (சலீம்.1990:183)

இதற்கான முக்கிய காரணம் அப்பாய்களில் காணப்படும் அலங்காரங்களாகும். தாம் பயன்படுத்தும் பொருட்களையும், சூழலில் காணப்படும் பொருட்களையும் வர்ண இழைகள் கொண்டு பாய்களில் அலங்காரங்களாக்கிவிடும் கைத்திறன் பன்கைவினைஞர்களின் தனித்துவமாகும். இதனை சான்றுப்படுத்துகின்றது பன்கைவினைஞர் ஒருவரின் பின்வரும் கருத்து. "நாங்க அயலண்டையில பாக்கிறதுகளையும், பாவிக்கிற டிசையினுகளையும் பாயில இழைச்சிருவம். கரிக்குருவி டிசைன், கோப்பிக் கொட்டை டிசைன், பிளேட் டிசைன், உக்கட்டு டிசைன், சிவப்பு ஒத்தக்கொடி, வெள்ள ஒத்தக் கொடி இப்பிடி கனக்க டிசைன் செய்யிறம்."(றிபாதா.பன்கைவினையாளர். காங்கேயனோடை) உண்மையில் அப்பாய்களின் அலங்காரங்களும் வர்ணங்களும் கண்கவர் விதமாகவே உருவாக்கப்படிருப்பது குறிப்பிடத்தக்கது.

பன்கொண்டு கூறைப்பாய் பின்னுவதில் பெண்கள் கைதேர்ந்தவர்களாக இருந்தனர். ஏழு பாய்களைக் கூறைப்பாய்களாக தயார் செய்து, ஒரு பெரிய அறையின் தரை அளவிற்கேற்றவாறு ஒரே ஒரு பாயாக விரிக்கக் கூடியளவிற்குப் பெரிய பாய்கள் இழைக்கப்பட்டன. உற்பத்திகளை அழகுபடுத்த தற்போது கோழிச்சாயம் பயன்படுத்தப்பட்டாலும் பாரம்பரியமாக தாவரச்சாறுகளில் சாயங்கள் தயாரித்துப் பயன்படுத்தப்பட்டுள்ளன. (புஹாரி,அப்துல் ஜவாத்,சுபைர்.2004.163,164)

பன் வேலைகளின் நுணுக்கமான விசேட ஆற்றல் உள்ளவர்களால் பன்பொறிகளில் செய்தது போல் மிக அழுத்தமாகவும் கவர்ச்சியாகவும் பாவனைப் பொருட்கள் உருவாக்கப்பட்டன. இதற்குக் காரணம் பன்கைவினைச் செயற்பாடுகளின் போது பிரயோகிக்கப்படும் அளவுப்பிரமாணங்கள், பின்னல்வேலைகளின் போதும் இழைத்தலின் போதும் கையாளபடும் சமநிலைத் தன்மை, வர்ணங்களுக்கும் வடிவங்களுக்கும் அலங்காரங்களுக்கிடையிலான இசைவு, அலங்கார வடிவங்களிடையே காணப்படும் லயம், வர்ணத் தெரிலும் பாவனையும் போன்றவை பன் கைவினைகளின் உயர்தரத்திற்கும் அலங்காரச் சிறப்பிற்கும் காரணமாகின்றன.

**வடிவவியல் கோட்பாடும் அதன் அடிப்படைகளும்**

அழகியலில் காணப்படுகின்ற கோட்பாடுகளுள் வடிவவாதம் முக்கியமானது. கலைபற்றிப் பேசுகின்றபோது 'வடிவம்' எனும் பதமானது ஒரு கலைப்படைப்பினுடைய உருவத்தை அல்லது கட்புலத்திற்கு தென்படுகின்ற விடயங்களை குறிப்பிடுதலாகும். அது மட்டுமின்றி இவ்விடயங்கள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகின்றது என்பதையும் குறிக்கின்றது. இக்கோட்பாட்டின் அழகியல் பெறுமானம் என்பது தனியே வடிவத்தில் மாத்திரமே தங்கியுள்ளது அதாவது ஒழுக்கவியல்

மற்றும் சமூகவிழுமியங்களின் அடிப்படையில் கலைகளை ரசிக்கவேண்டிய அவசியமில்லை என்பது இதன் அடிப்படையாகும். (Noel Carroll.2005:88)

வடிவவாதிகள் தனியே ஒருகலைப்படைப்பின் அரூபப் பண்புகள் அல்லது அதன் வடிவவிடயங்களுக்கு மாத்திரமே முக்கியத்துவம் வழங்குவர். இங்கு கோடுகள், வர்ணம், நேர்த்தி, வடிவம், எனும் காண்பிய அம்சங்களின் ஒழுக்குபடுத்தலுக்கே அதிகம் முக்கியத்துவம் வழங்குவர். கலைப் பொருட்கள் வழங்கும் உள்ளடக்க விடயங்கள் அவ்வளவு முக்கியத்துவம் பெறாது.(Immanuuel Kant.2007:13)

கலைப்படைப்பு எனும் வகையில் கலைப்படைப்புகள் அனைத்தையும் வடிவம் என்கின்ற ஒரு பண்பு ஆதிக்கம் செலுத்துகின்றது. எந்த ஒரு கலைக்கும் வடிவம் இருக்கும். எனவே தான் வடிவவாதம் கலைக்கோட்பாடுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

கலைப் பொருளொன்றின் உருவாக்கத்தில் வடிவமைப்புக் கூறுகளின் தெரிவு, அவற்றின் ஒழுங்கமைப்பு என்பன தொடர்பில் உள்ளார்ந்தமாக அமைந்துள்ள சில பண்புகளை அடிப்படையாகக் கொண்டு கலைப்படைப்பை மதிப்பீடு செய்வதே வடிவவியல் கோட்பாட்டின் அடிப்படையாகும். வடிவவியல் கோட்பாடு கலைப்படைப்புகளை அவற்றின் அழகியல் ரீதியாக ஆய்வுசெய்யவில்லை. அவற்றின் வடிவமைப்புக் கூறுகளினூடாகவே ஆய்வு செய்கின்றது. இதன்படி வடிவமைப்புக் கோட்பாடு கலைகளின் உள்ளார்ந்த பண்புகளாகச் சமநிலை (Balance) , இசைவு(Harmony), அளவுவிகிதம்(Proportion), இசையொழுங்கு (Rhythm) , ஒருமைப்பாடு(Unity) , பரப்பளவு(Texture), வேற்றுமை(Contrast), நிறம் (colour) என்பவற்றைக் குறிப்பிடுகின்றது. 'கலை ஆக்கம் ஒன்றில் இவை முறையாக அமைக்கப்படும் போது அது ரசனைமிக்க படைப்பாகின்றது. இவ்வடிப்படைப் பண்புகள் கையாளப்படும் விதமே ஒரு கலைப் பொருளின் அழகியல் பெறுமானத்திற்கு அடிப்படையாக அமைகின்றது. என வடிவமைப்புக் கோட்பாடு தொடர்பாக விக்கிபீடியா தகவல் தருகின்றது'. ஒரு படைப்பின் பல்வேறு உறுப்புகளின் ஒன்றிணைந்த முழுமையே வடிவவியல் கொள்கையின் அடிப்படையாக உள்ளது(D. W.Prall.1967).

Sasha Blakely, Christopher ஆகிய இருவரும் வடிவவாதம் பற்றிக் குறிப்பிடும் போது 'கலையின் மதிப்பு அதன் வடிவம், மற்றும் பாணியிலேயே உள்ளன. இதனால் கலை படைப்பு அது உருவாக்கப்பட்டிருக்கும் கூறுகளான கோடு, வடிவம் மற்றும் நிறம் போன்றவற்றின் அடிப்படையிலேயே ஆய்வு செய்யப்பட வேண்டும் என்கின்றனர்(Formalism vs Art for Art's sake. Definition & examples. 21/11/2025)

Rusty Freeman 'வடிவவாதம் பற்றிய தனது கருத்தில் 'வடிவவாதம் கலைப்படைப்பு உருவாக்கும் வடிவங்களை மட்டுமே முழுமையாக ஆய்வு செய்கின்றது. கலைப்படைப்பு உருவாக்கப்படும் வடிவம், கோடு, அமைப்பு, அளவு, நிறம் என்பவற்றை எவ்வாறு பயன்படுத்துகின்றது என்பதை இது முழுமையாக ஆய்வு செய்கின்றது' என்கின்றார்(Formalism & Symbolic Content)

இவற்றிலிருந்து நோக்கும்போது கலைத்துறையில் உருவாக்கப்பட்ட கலை விமர்சனக் கோட்பாடான வடிவவாதம் ஏனைய கலைக் கோட்பாடுகளில் இருந்து சற்று விலகி படைப்பின் உருவாக்க மூலங்களில் கவனம் செலுத்துவதனூடாக அக்கலைப்படைப்பின் அழகியல், கலைத்துவம் என்பன தொடர்பாக ஆராயும் கலைக் கோட்பாடாக வளர்ந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வடிவவியல் கோட்பாட்டின் அடிப்படையில் பன்பாய் கைவினை**

கலைப்படைப்பின் அழகியலை மேம்படுத்த அப்படைப்பின் வடிவமைப்புக் கூறுகளின் தெரிவு, அவற்றை ஒழுங்கமைக்கும் செயற்பாடு என்பவை முக்கியமாகும். வடிவமைப்பு கோட்பாடானது படைப்பொன்றின் உருவாக்கத்தின் போது கவனம் செலுத்த வேண்டிய பண்புகளாக சமநிலை, மூலப்பொருட்களின் இசைவு, அளவுவிகிதம், இசைவொழுங்கு, மூலக்கூறுகளுக்கிடையேயான பொதுமைப்பாடு, குவியம், வடிவமைப்புக் கூறுகளுக்கிடையேயான வேற்றுமையை பயன்படுத்தியுள்ள திறன், நிறப் பயன்பாடு என்பவற்றை முன்மொழிகின்றது.

வடிவவியல் கோட்பாடு முன்வைக்கும் இப்பண்புகள், பன்கைவினை உருவாக்கங்களுடன் முழுமையாக ஒப்பிட்டு ஆய்வு செய்யக் கூடியதாக அமைந்துள்ளது.

**சமநிலை (Balance)**

இது படைப்பொன்றில் வடிவமைப்புக் கொள்கை ஆராயும் பண்புகளில் ஒன்றாகும். 'வடிவமைப்பு தொடர்பில் சமநிலை என்பது கலை ஆக்கங்களின் பகுதிகளின் கூட்டமைவில் ஒரு பகுதி இன்னொரு பகுதியை குறைத்து விடாதபடி இருக்கும் நிலையை குறிக்கின்றது. சமநிலையை சமச்சீர் ஒழுங்கமைவு மூலம் அல்லது சமச்சீரற்ற ஒழுங்கமைவு மூலம் அடைய முடியும். சிறப்பான கூட்டமைப்பின் மூலம் படைப்பாக்கத்தின் எல்லா பகுதிகளும் ஒன்றுடன் ஒன்று சமநிலையில் உள்ள வடிவமைப்பையே இது குறிப்பிடுகின்றது' எனக் கலைப்படைப்பில் சமநிலை பற்றிக் குறிப்பிட்ட Abiguil Angell, Haddy kreie ஆகியோர் குறிப்பிடுகின்றனர். (Unity in Art/ Definition,elements & examples- 21/11/2023)

உற்பத்திக்கு பிரதான மூலவளமான பன்புல், பன்வயலிலிருந்து வெட்டப்பட்டு வெயிலில் உலர்த்தப்பட்ட பின்னர் அவற்றின் நீளத்தின் அடிப்படையில் அவை தரப்படுத்தப்படுகின்றது. இச்செயற்பாடானது பின்னல் வேலைகளின் போதும், இழைத்தல் வேலைகளின் போதும் பின்னல்களுக்கு இடையேயும், இழைகளுக்கிடையையும் சமநிலையைப் பேணும் அடிப்படைச் செயற்பாடு ஆகும். பன் உற்பத்திகளை மெருகூட்ட வெயிலில் உலர்த்தப்பட்ட பன்புற்களுக்கு வர்ணங்கள் சேர்க்கப்படுகின்றன.

உற்பத்திச் செயற்பாடுகளின் போது வர்ணக் கையாள்கையிலும் சமநிலை பேணப்படுகின்றது. பாய்களின் நீளவாக்கிலோ குறுக்கு வாக்கிலோ வர்ண இழைகள் சம அளவில் பயன்படுத்தப்படுகின்றன. " பன்ன ஒரேயளவில தட்டையாக்கினா தான் இழைக்கிறதக்கு வடிவா இருக்கும். அதால ஆரம்பத்தில பருத்திமனையில வைச்சு தட்டயாக்கின. இப்ப அதுக்கு கரண்ட் மெஷின் பாவிக்கிறம்."(அமானா:35). இத்தகைய சமமான அளவுத்திட்டம் உற்பத்திப் பொருளின் அழகியலை மேம்படுத்த உதவுகின்றது. பெட்டி, மூடி, பாய் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் இழைத்தல் வேலைகளின் போது உருவாக்கப்படும் அலங்கார வடிவங்களிலும் இந்த சமநிலைப் பிரயோகத்தை காணலாம்.

'ஈரப்பிலாக்காய்', 'வெள்ளை பிளேட்' போன்ற வடிவங்களில் பயன்படுத்தப்படும் சதுர, நீள, குருவி அலங்காரங்களில் வர்ணம், வடிவங்கள், வடிவங்களுக்கு இடையேயான இடைவெளி என்பவற்றில் சமநிலை நேர்த்தியாகக் கையாளப்பட்டுள்ளதை காணலாம். இந்த அலங்காரங்களின் அழகியல் தனித்துவத்திற்கு அதில் பயன்படுத்தப்படுகின்ற நிறங்கள், இழைகள், வடிவங்கள் என்பவற்றின் சமநிலையான




பயன்பாடே காரணமாகும். இவற்றில் எது தவறினாலும் இவ் உருவாக்கங்களின் அலங்காரங்கள் தரும் அழகு கெட்டுவிடும். இதனால் உற்பத்தியாளர்கள் தங்கள் கைவினை





உற்பத்திகளின் போது மூலக்கூறுகளின் சமநிலை தன்மை சிறிதளவும் பிழைத்து விடாதவாறு கருத்தூன்றலுடன் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது. இதனைப் பின்வரும் கருத்து இன்னும் வலுப்படுத்துகின்றது. “ சரியான நுணுக்கமா வேல செய்யணும் புள்ள. ஒரு இழ பிழைச்சாலும் வடிவா இருக்காது. அதால கூர்மையா பார்த்து பார்த்து பின்னோணும். கண்ண சுருக்கிச் சுருக்கிப் பார்க்கிறால இப்ப கண்ணும் புகைச்சல் எடுத்திற்று”.இக்கருத்து இழைகளின் கையாள்கையில், வடிவங்களின் அமைப்பில் சமநிலை குலையாதவாறு உன்னிப்பாகச் செயற்படும் உருவாக்கல் முறையை வெளிப்படுத்துகின்றது.

மேற்படி பன் அலங்காரங்களில் வர்ணங்களிலும், வடிவங்களிலும், இழைகளிலும் சமச்சீரும் சமநிலைத் தன்மையும் கையாளப்பட்டிருப்பதையும் அக்கூறுகள் இவ்வாக்கங்களுக்கு அழகு சேர்த்து இரசனையை அதிகரிக்கச் செய்வதையும் காணலாம். இது கலை வடிவமைப்பில் சமநிலைத்தன்மை பற்றி Abiguil Angell, Haddy kreie ஆகியோர் குறிப்பிட்ட கருத்துக்களையும் இமானுவல் கான்ட் மூலக்கூறுகளுக்கிடையிலான சமநிலைத் தன்மை அப்படைப்பின் அழகியில் தாக்கம் செலுத்துகிறது எனும் கருத்துக்களையும் ஒத்திருப்பதைக் காணலாம். இது பன்சார் கைவினைகளை கலையின்பால் வைத்துப் பார்க்கச் செய்யும் சாத்தியங்களை உருவாக்கியுள்ளது.

**ஒத்திசைவு (Harmony)**

‘கலைப்படைப்பில் பயன்படுத்தப்படும் கூறுகளுக்கு இடையிலான இணைப்பை இதை குறிப்பிடுகின்றது. கலைப் படைப்புகளில் இசைவு என்பது ஒற்றுமை மற்றும் ஒத்திசைவு உணர்வை உருவாக்க ஒத்த தொடர்புடைய கூறுகளை இணைக்கும் செயற்பாடாகும். இதன் மூலம் பார்வைக்குத் திருப்திகரமான, ரசனையைக் கொண்டுவர முடியும். இது படைப்பின் முழு அலங்கார உருவாக்கத்திற்குமே காரணமாக அமையும்’ எனக் கலைப்படைப்பில் மூலக்கூறுகளின் ஒத்திசைவு பற்றிக் குறிப்பிட்ட Jo Amy Rollo, Abby Ecker ஆகிய இருவரும் கூறுகின்றனர்.(Principal of Art/ overview & elements)

பன்கைவினை உருவாக்கங்களில் இந்த ஒத்திசைவானது வர்ணங்களாலும் வடிவங்களாலும் உருவாக்கப்படுகின்றது. உற்பத்திப் பொருட்களின் அலங்காரங்களில் வர்ணங்கள் ஒன்றுக்கொன்று ஒத்திசையக்கூடியவாறு தெரிவுசெய்யப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. கேத்திரகணித வடிவங்களில் சதுரம், செவ்வகம் போன்ற ஒன்றிற்கொன்று ஒத்திசையக்கூடிய வடிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன, வர்ண, வடிவ அளவுத்திட்டங்களின் ஒத்திசைவு அதன் அழகினை முனைப்புறுத்திக் காட்டும் வண்ணம் உருவாக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.





மேற்படி அலங்காரங்களில் செவ்வகத் துண்டுகள் குறுக்காகவும் கிடையாகவும் அடுத்தடுத்து வரும் வகையில் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டிருக்கும் தன்மையால் அவ்வடிவங்களுக்கிடையே ஓர் ஒத்திசைவை வெளிப்படுத்தியுள்ளதைக் காணச் செய்கின்றது. சிவப்பு, பச்சை ஆகிய வர்ணங்கள் வடிவங்களின் ஒன்றுவிட்டொன்றாகச் சட்டகங்களாகவும், வடிவங்களை முனைப்புறுத்திக் காட்டும் உள்ளலங்காரங்களாகவும் தொடர்ச்சியாகக் கையாளப்பட்டு வர்ணங்களுக்கூடான ஒத்திசைவை வெளிப்படுத்தியுள்ளன. இவ்வொத்திசைவுத் தன்மைகள் கட்புல அழகியலை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன.

அது மட்டுமில்லாமல் இவை மேலே காட்டப்பட்டுள்ளது போன்று காட்சிப்புலக்கலையின் (Op Art) நவீன கலைவடிவங்களின் உருவ வர்ண ஒத்திசைவுகளைக் கொண்டவையாகவும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (சனாதனன்.2020:74)

இவ்வாறு பன்சார் உற்பத்திகள் பயன்சார் தேவைகளை ஈடு செய்தாலும் அதனையும் தாண்டி அவற்றின் கட்புல அழகியலை வெளிப்படுத்தும் நோக்கில் வர்ணங்களும், வடிவங்களும் அலங்காரங்களும், இழைகளும் ஒன்றிற்கொன்று ஒத்திசைவாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் தன்மை கட்புல ரீதியான ரசனையை அதிகப்படுத்துவதாக அமைகின்றது.

பன் இழைகள் மிகவும் மெல்லியதாகவும் பாரமற்ற இலகு தன்மையுடையதாகவும் காணப்படுகின்றன. அத்தகைய நுண்ணிய இழைகளை பயன்படுத்தி மிக நுட்பமான அலங்காரங்கள் வடிவாக்கம் செய்யப்பட்டிருப்பது கைவினைகளின் பயன்பாட்டைத் தாண்டி அவற்றின் அழகியலின்பால் நகர்த்தக்கூடியதாக அமைகின்றது. இத்தன்மை வடிவவாதப் பண்புகளுடன் பன்பாய்க் கைவினைச் செயற்பாடுகளைப் பொருத்தமுறச் செய்யும் செயலாக்கத்தையும் பெறுவதைக் காணலாம்.

**அளவு விகிதம் (Proportion)**

Kyle Deguzman ‘கலையில் விகிதாசாரம் என்பது ஒரு படைப்பில் உள்ள பல்வேறு கூறுகளுக்கு இடையே உள்ள உறவை குறிக்கின்றது. அல்லது ஒன்றுக்கொன்று தொடர்புடைய ஒரு பொருளின் பகுதிகள், அளவுகள் எவ்வாறு ஒன்றாக பொருந்துகின்றன?, அளவு மற்றும் பரிமாணங்களின் அடிப்படையில் அவை எவ்வாறு ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக தோன்றுகின்றன? என்பதைப் பற்றிய அம்சமே அளவு விகிதமாகும் என்கின்றார்(What is proportion in art – Definition & Examples.( 25.12.2022)

பன்பொருட்கள் பலவித தேவைகளுக்காக உருவாக்கப்படுகின்றன. இதனால் இவை வெவ்வேறு வடிவங்களிலும் அளவுகளிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. பயன்பாட்டுத் தேவை கருதி இவற்றின் வடிவங்கள் வேறுபட்டாலும் ஒவ்வொரு கைவினைப் பொருட்களும் அவற்றிற்குரிய அளவுதிட்டங்களிலேயே தயாரிக்கப்படுகின்றன. கூடைகள், பாய்கள் (திருமணப்பாய், பந்திப்பாய், வரவேற்புப்பாய், தொழுகைப்பாய், தொட்டில்பாய் போன்றன),

பெட்டிகள், மூடிகள், அகப்பை கொளுவி, தொப்பிகள் தட்டுக்கள் போன்றவற்றிற்கு வெவ்வேறு விதமான அளவுத் திட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் வடிவத்திற்கும் அளவிற்கும் ஏற்பவே பன்புற்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன. இதிலிருந்தே பன் கைவினையின் அளவு விகிதம் கருத்தில் கொள்ளப்படுவது கவனிக்கத்தக்கது. பொருளின் அளவிற்கேற்பவே அதில் பயன்படுத்தப்படும் அலங்காரங்களும் தெரிவு செய்யப்படும் திருமணப்பாய், விருந்துப்பாய் போன்றவற்றின் அளவிற்கேற்ப பெரிய அளவிலான சதுர அலங்காரங்களும், கரிக்குருவி அலங்காரம், சிவப்பு ஒற்றைக்கொடி அலங்காரம், உக்கட்டுப் பின்னல் போன்றவற்றை பயன்படுத்துகின்றனர்.

அலங்காரங்களுக்காகப் பன்புற்களைச் சாயம் இடும் போதும் ஒரு பொருளுக்கு பயன்படுத்தப்படும் புற்கள் குறிப்பிட்டளவு நீரில் குறிப்பிட்ட அளவு வர்ணப் பொடியை கலந்து ஒரே அளவு நேரத்திலேயே ஊறவைத்து அவித்தெடுக்கப்படுகின்றது. நீரில் கலக்கும் வர்ணத்தூளின் அளவு கூடினாலோ குறைந்தாலோ பெறப்படும் நிறத்தில் வேறுபாட்டை ஏற்படுத்திவிடும். எனவே பன்கைவினையில் பயன்படுத்தப்படும் இழைகளை வர்ணப்படுத்தும் செயற்பாட்டில் கூட அளவு விகிதம் சரிவர கடைப்பிடிக்கப்படுகின்றது.

இவை மட்டுமின்றி உருவாக்கப்படும் அலங்கார உருவங்கள் எந்தவித அளவீட்டு கருவிகளைக் கொண்டும் அளவிடப்படுவதில்லை. குறுக்காகவும் நெடுக்காகவும் இழைக்கப்படும் இழைகளின் எண்ணிக்கையின் அளவே அலங்கார உருக்களின் பக்கங்களின் அளவு விகிதம் ஆகின்றது. கருவிகளில் அளந்து வரையும் வடிவங்களை விட பயன்படுத்தும்





ஈரப்பிலாக்காய் அலங்காரம் வெள்ளை ஒற்றைக்கொடி அலங்காரம் கோப்பிக் கொட்டை அலங்காரம்

பன்னின் எண்ணிக்கையின் அளவைக் கொண்டு நேர்த்தியான நுட்பமான வடிவங்கள் சரிவிகித அளவில் பன்கைவினையாளர்கள் பயன்படுத்துவது பன் கைவினையின் கண்கவர் அலங்காரச் சிறப்பிற்கு வழிவகுக்கிறது.




**இசைவொழுங்கு (Rhythm)**

கலைப் படைப்புக்களில் இசைவொழுங்கு என்பது ஒரே விடயத்தை குறிப்பிட்ட கால இடைவெளியில் மீண்டும் மீண்டும் செய்வதைக் குறிக்கும். படைப்பில் காட்சிக் கூறுகளின் கட்டமைக்கப்பட்ட தொடர் செயற்பாடு இசைவொழுங்காகும். இது பார்வையாளரைக் கட்புல ரசனை வழியாக வழிநடத்திச் செல்லும் கட்புல வடிவமைப்பாகும் என்கின்றார் Kyle Deguzman.(What is rhythm in Art-Principles, types & techniqus – 15.03.2025)

பன் கைவினை உருவாக்கத்தைப் பொறுத்தவரை அவை அனைத்தும் ஒரே விதமான பின்னல்களால் அல்லது இழைத்தலால் தொடர்ச்சியாகச் செய்யப்படும் கைவினைப் படைப்பாகும். இதற்காக பயன்படுத்தப்படும் அலங்காரங்கள் கூட ஒரே இடைவெளியில், ஒரே அளவுத்திட்டத்தில் மீண்டும் மீண்டும் உருவாக்கப்படுவதனூடாகப் பெறப்படுகின்றன. இதற்காகப் பயன்படுத்தப்படும் வர்ணக் கையாள்கைகள் கூடத் தொடர்ச்சியாக ஒரே விதமான ஒழுங்கமைப்பிலேயே உருவாக்கப்படுகின்றது. ஒரே அளவிலான இழைகளுக்கு ஊடாக மீண்டும் மீண்டும் ஒரே வர்ணங்களையோ அல்லது இரண்டு மூன்று வர்ணங்களையோ பயன்படுத்தி தொடர்ச்சியாக உருவாக்கப்படும் அலங்கார கோலங்கள், பன் கைவினைகளின் கட்புல ரீதியான அழகான காட்சிப்படிமத்தை உருவாக்குகின்றன. இழைகளினாலும் வண்ணங்களினாலும் உருவாக்கப்படும் இந்த இசைவொழுங்கு தட்டையாக நீளமானதாக உருவாக்கப்படும் பாய் போன்றவற்றின் கட்புல அழகியலைத் துல்லியமாக வெளிப்படுத்தக் கூடியவை.

வர்ண இழைகள் கொண்டு உருவாக்கப்படும் இந்த அலங்காரங்கள் கூட குறிப்பிட்ட இடைவெளியில் மீண்டும் மீண்டும் உருவாக்கப்படும். இந்த அலங்கார உருவங்கள் வெளிப்படுத்தும் ரசனை கூட பயன்பாட்டைத் தாண்டிய கட்புலக் கவர்ச்சியையும் அதன் அழகியல் ஈடுபாட்டையும் நுகர்வோர்களிடத்தில் மிகைப்படுத்தி விடுகின்றது.

மூன்று விதமான வர்ணங்கள் உள்ள இழைகளை குறிப்பிட்ட இடைவெளியில் குறித்த அளவுகளில் குறுக்கு நெடுக்காகப் பயன்படுத்தி உருவாக்கப்படும் ஈரப்பிலாக்காய் அலங்கார வடிவம், இரு வர்ணங்களிலான நான்கு இழைகளைக் கொண்டு ஒரு வர்ண இழையைக் குறுக்காகவும் மற்றயதை நெடுக்கு வாக்கிலும் வைத்து இழைத்து உருவாக்கப்படும் வெள்ளை ஒற்றைக்கொடி அலங்காரம், (இதில் குறுக்காகவோ நெடுக்காகவோ பயன்படுத்தப்படும் ஏதாவது நான்கு இழைகள் மஞ்சள் நிறமாக இருக்கும் படி அமைத்துக் கொள்வார்கள் ) மூன்று வர்ண இழைகளைச் சமஅளவில் பயன்படுத்தி உருவாக்கப்படும் கோப்பிக்கொட்டை அலங்காரம் என்பவற்றின் உருவாக்கங்களின் ஒழுங்கில் இசைவொழுங்கு, நேர்த்தி என்பன இவற்றை கலை படைப்புகளின் தரத்தை ஒத்த அலங்கார அழகியல் கொண்டவை எனத்தரப்படுத்தச் செய்கின்றது. இத்தகைய அழகுடன் இழைக்கப்படும் பன்பாய்களுடன் தட்டுக்களும், மூடிகளும் கூடச் சான்று பகர்கின்றன.

**ஒருமைப்பாடு ( Unity)**

கலை படைப்பின் போது அதன் கூறுகளுக்கு இடையே காணப்படும் ஒற்றுமை, ஒத்த தன்மை என்பவற்றின் மூலம் உருவாக்கப்படும் அழகியல் ரசனையை இது பேசுகின்றது. கலை படைப்பில் உள்ள மூலக்கூறுகளின் இணைவினூடாக உருவாக்கப்படும் ஒருமைப்பாட்டையும் அந்த ஒருமைப்பாடு தரும் கட்புல ரசனையையும் இது குறிப்பிடுகின்றது என்கின்றனர் Abigail Angell, Haddy Kreie ஆகிய இருவரும்.

பன் கைவினை உற்பத்திகளை எடுத்துப் பார்க்கின்ற வேளையில் அவற்றின் ஒவ்வொரு உற்பத்தி பொருட்களின் பயன்பாட்டையும், தேவைகளையும் கருத்தில் கொண்டே தயாரிப்பின் போது மூலப்பொருட்கள் ஒன்றிணைக்கப்படுகின்றன. பன் இழைகள் அவற்றிற்கான வண்ணங்கள், பின்னல் வகைகள், உருவாக்கப்படும் வடிவ மாதிரிகள், அவற்றிற்கு பயன்படுத்தப்படும் அலங்காரங்கள், அளவுப் பிரமாணங்கள் போன்றவற்றின் ஒருமைப்பாடு பொருத்தமாக இணைக்கப்பட வேண்டும். பன் கைவினையாளர்கள் இதனை வெற்றிகரமாகத் தமது கைவினை உருவாக்கங்களில் கையாண்டிருப்பதை கண்கவர் பன்பாய் படைப்புகள் வெளிப்படுத்துகின்றன.

பன்புல்லின் இழைகளே பன் கைவினைக்கு மூலதனமாக அமைகின்றது. இப்பன் புற்கள் மெல்லியதாகவும் நீளமானதாகவும் காணப்படுகின்றன. இதனால் இவற்றை


நேராகவும் கிடையதாகவும் வைத்து இழைக்கும் போது பெரும்பாலும் சதுரம் செவ்வகம் போன்ற அமைப்புக்களே கிடைக்கும். இவையே பாய்களுக்கும், பெட்டி, தட்டுக்களுக்கும் கூடைகளுக்கும் பொருத்தமான வடிவங்களாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றின் ஊடாக உருவாக்கப்படும் அலங்கார வடிவங்கள் கூட பெருமளவில் சதுர செவ்வக வடிவங்களால் ஆனவையாகவே காணப்படுகின்றன. அப்படி அமைக்கும் போது தான் அவ்வலங்காரங்கள் பன்னின் இழைகளுடன் பொருந்தி ஒருமைப்பாட்டுத் தன்மையின் அழகியலை வெளிப்படுத்துகின்றது. இதன் பொருட்டு தான் பன்பாய்களில், சிவப்பு ஒற்றைக் கொடி, கோப்பிக் கொட்டை அலங்காரம் பச்சை பிளேட் அலங்காரம், உக்கட்டு அலங்காரம், புனி அலங்காரம் போன்றவற்றைக் கொண்ட பின்னல் வேலைகளைக் காண முடிகின்றது.



சிவப்பு ஒற்றைக்கொடி



உக்கட்டு



பச்சைபிளேட்



புனி

**பரப்பமைவு (Texture)**

கலைப்படைப்பொன்றில் அதன் மேற்பரப்புத் தன்மை முக்கியமானது. பெரும்பாலும் இது தொட்டுணரக்கூடியதாக இருக்கும். மேற்பரப்புத் தளத்திற்கேற்ப கலை தரும் சுவையும் வேறுபடும். குகைச் சுவர்களில் வரையப்பட்டுள்ள ஓவியங்களுக்கும் காரிக்கன் துணிகளில் வரையப்பட்ட ஓவிய மேற்பரப்புகளுக்கும் இடையே வேறுபாடுகளை உணர முடியும்.

பன் கைவினைகளைப் பொறுத்தவரை இதன் மூலப்பொருளான பன்புல்லானது மெல்லிய குழல் போன்று நீண்டு வளரக்கூடியது. இப்புல்லின் வெளிப்புறம் இயல்பாகவே வழுவழுப்பான தன்மையைக் கொண்டிருக்கும். இப்புல் வெட்டி வெயிலில் உலர்த்தப்பட்டு பருத்தி மனைகள் மூலம் தட்டையாக்கப்பட்டு கைவினைப் பொருட்கள் உருவாக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. சிறிய உருண்டையான குழல் தன்மையான புல் தட்டையாக்கப்படும்போது அதன் இருபுறமும் ஒரே மாதிரியான பளபளப்பு தன்மை கொண்ட மெல்லியதும் உறுதியானதுமான புல் இழை கிடைக்கின்றது.

இவ்விழைகள் வெயிலில் காய விடப்பட்டதும், மெல்லிய மஞ்சள் நிறம் கொண்ட இழைகளாகப் கிடைக்கின்றன. இவற்றில் பச்சை, சிவப்பு வர்ணங்கள் சேர்க்கப்பட்டு அழகு மிக்க பொருட்கள் உருவாக்கப்படுகின்றன இயல்பான மெல்லிய மஞ்சள் நிறமும் தட்டையான பளபளப்பான தன்மையும் கொண்ட மேற்பரப்பு தன்மை பன் கைவினைப் பொருட்களின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. இது இயல்பாகவே பன் கைவினைப் பொருட்களுக்கு தனித்துவமான ஒரு கவர்ச்சித் தன்மையைக் கொடுக்கின்றது.

**வேற்றுமை (Contrast)**

கலைகளில் மாறுபாடு என்பது ஒளி மற்றும் இருள் போன்ற எதிரெதிரக் கூறுகளின் அமைப்பைக் குறிக்கின்றது. இது காட்சி ஆர்வத்தை உருவாக்கவும், ஒரு கலைக்குள் வேறுபாடுகளை முன்னிலைப்படுத்தவும், பார்வையாளரின் கவனத்தை குறிப்பிட்ட பகுதிக்குள் ஈர்க்கவும், படைப்பில் ஆழத்தைக் கொண்டு வரவும் பயன்படுத்தப்படுகின்றது.

எதிரெதிர்க் கூறுகளை ஒன்றிணைப்பதனூடாகப் பார்வையாளர்களின் கவனத்தை அதன் மாறுபாடான தன்மைக்குள் ஈர்ப்பதன் மூலம் வேறுபாடுகளின் அழகியல் வெளிப்படுத்தப்படுகிறது. கலையில் உள்ள இந்த மாறுபாடான வரையறை, படைப்பாக்கல் செயல்முறையின் அனைத்து அம்சங்களுக்குள்ளும் பயன்படுத்தப்படுகின்றது.

‘வர்ணங்கள், அளவீடுகள், நிழல் மற்றும் ஒளியின் பயன்பாடு, எதிரெதிரான அமைப்புகள், வேறுபட்ட வடிவங்கள் என கலைக்கூறுகள் அனைத்திலும் எதிரெதிரான தன்மைகளை பயன்படுத்துவதன் மூலம் படைப்பில் வேறுபட்ட விளைவுகளைக் கொண்டு வரமுடியும். ஒன்றையொன்று எதிர்க்கும் இரண்டு அம்சங்களை அருகருகே அமைப்பதன் மூலம் படைப்பில் வன்மையான தாக்கத்தை ஏற்படுத்தலாம் எனக் கூறப்படுகின்றது.(What is contrast in art and how to use in your design – 18.01.2024)

இந்த வேற்றுமையான தன்மையானது பன் கைவினைகளின் பல கூறுகளுக்கூடாகப் பயன்படுத்தப்படுகிறது. பன் இழைகளை இழைக்கும் போது அவை ஒன்றிற்கொன்று வேறுபாடான நிலைகளில் குறுக்கும் நெடுக்கமாகக் கையாளப்படுகின்றது. இங்கு பயன்படுத்தப்படும் வர்ணங்கள் கூட பெரும்பாலும் எதிர் வண்ணங்களாகவே காணப்படுகின்றன. பச்சை சிவப்பு போன்ற வண்ணங்களே பன் ஆக்கங்களில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. வர்ணச்சக்கரத்தில் பச்சை வண்ணத்திற்கு சிவப்பு எதிர் வர்ணமாக அமைகின்றது. எனவே ஒன்றிற்கொன்று எதிரான வர்ணக் கையாள்கை மூலம் நுகர்வோரின் கவனத்தை ஈர்க்கும் தன்மையில் இங்கு எதிர் வர்ணங்கள் பயன்படுத்தப்படுகின்றமை வேற்றுமை வர்ணங்களினூடான இரசனையை நுகர்வோருக்குத் தருகின்றது. கரிக்குருவி அலங்காரம், சிவப்பு ஒற்றைக் கொடி, ஈரப்பிலாக்காய் போன்ற அலங்கார வடிவங்களில் இப்பண்பினை காணமுடியும்



கரிக்குருவி அலங்காரம்



ஈரப்பிலாக்காய் அலங்காரம்

அலங்காரங்களை எடுத்துக் கொண்டால் பெரும்பாலும் ஒரு அலங்காரத்தின் எதிர்நிலையிலேயே மறு அலங்காரம் உருவாக்கப்படுகின்றது. குறிப்பிட்ட அலங்காரத்தின் இழைகள் நீள வாக்கில் காணப்பட்டால் அதன் அடுத்த அலங்கார இழைகள் அதனை வெட்டி எதிர்பக்கம் செல்லும் வகையிலேயே உருவாக்கப்படுகின்றன. ஈரப்பிலாக்காய் அலங்காரம், ஒற்றைக்கொடி அலங்காரம், சிவப்பு பிளேட், உக்கட்டு போன்ற அனைத்து அலங்கார வடிவங்களிலும் இந்த எதிர்மறையான வேற்றுமைத் தன்மையைச் சுட்டிக்காட்ட முடிகின்றது. ஒன்றுக்கொன்று வேற்றுமையான அம்சங்கள் ஒரே இடத்தில் இணைக்கப்படும் போது அது நுகர்வோரின் கட்புல ரீதியான அவதானத்தை ஈர்க்கும் செயல்பாடாக அமைகின்றன. அந்த வகையில் பன் கைவினை உற்பத்திகளிலும் வர்ணம், வடிவம், பின்னல் முறை, அலங்கார உற்பத்திகள் என்பவற்றில் இத்தகைய வேற்றுமையான பண்புகளை இணைத்து உருவாக்கப்படுவது நுகர்வோரின் கவனத்தை ஈர்த்து ரசனைத் தூண்டலை உருவாக்கும் நுட்பமாகவே பயன்படுவதைக் காண முடிகின்றது.

## நிறம் (Colour)

நிறங்கள் ஒரு பொருளில் பிரதிபலிக்கும் ஒளி நிழல்களால் படைப்பின் பொருளைக் குறியீட்டால் உணர்த்தும் தன்மை கொண்டவை. வர்ணச்சக்கரத்தை அடிப்படையாகக் கொண்டு வர்ணங்கள் முதன்மை, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை வருணங்கள் என வேறுபடுத்திக் காட்டப்படுகிறன. வர்ணச்சக்கரத்தில் ஒற்றைத் தன்மையுடைய வர்ணங்கள், எதிர்த்தன்மையுடைய வர்ணங்கள், சூடான மற்றும் குளிரான வர்ணங்கள், கலப்பு வர்ணங்கள் போன்றவை பற்றியும் விளக்கப்படுகிறது.

இதன் கீழ் பன் கைவினைகளில் ஆரம்பத்தில் இயற்கை மூல வளங்களில் இருந்தே வர்ணங்கள் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன இதன்படி சிவப்பு - பட்டங்கி மரத்துண்டு, மஞ்சள் - மரமஞ்சள்பட்டை, ஊதா - தம்பை மரப்பட்டை, பச்சை - அலறி, மலைவேம்பு இலைகள், கருப்பு - தான்றிக்காய். கடுக்காய் போன்றவற்றிலிருந்து வர்ணங்கள் பெறப்பட்டிருந்தன. இதன்படி இரண்டு மூல வர்ணங்களும், 3 துணை வர்ணங்களும் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. பன் கைவினைகளைப் பொறுத்தவரை பச்சை, சிவப்பு ஆகிய இருவர்ணங்களுமே அதிகளவு பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை இரண்டுமே எதிர் வர்ணங்களின் பண்புகளையும் கொண்டுள்ளன.

படைப்புத்தளத்தில் இரண்டு எதிர் வர்ணங்கள் இணைக்கப்படும் போது அதனால் உருவாக்கப்படும் கட்புலப் படிமம் எப்போதும் படைப்பினை முனைபுறுத்திக் காட்டும் தன்மையைக் கொண்டிருக்கும். அலங்காரக் கூறுகளைத் தனித்துத் தெரியச் செய்து, காட்சி ஈர்ப்பை மேம்படுத்தவும் எதிர்வர்ணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இது படைப்பாக்கத்தின் பிரகாசத் தன்மையை அதிகரிக்கிறது. நுகர்வோர் கவனத்தை ஈர்க்கக்கூடிய உயரிய நுட்பமாகவும் இது காணப்படுகின்றது.

பன்சார் கைவினைகளில் பச்சை சிவப்பு ஆகிய எதிர்வர்ணங்கள், குறுக்கு நெடுக்கான இழைகளாகவும், எதிரெதிரான அலங்காரக் கூறுகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய நிறப் பயன்பாடுகளை பயன்படுத்துவதன் ஊடாக கட்புலக் கவர்ச்சியை அளித்து நுகர்வோருக்கு ரசனையை தூண்டும் விதமாக பன்கைவினைகளில் வர்ணங்கள் கையாளப்பட்டிருப்பதைக் காணலாம்.

இவற்றிலிருந்து நோக்கும் போது கலைக் கோட்பாடான வடிவவியல் கோட்பாடு முன்வைக்கும் படைப்பாக்கக் கூறுகளை பன்கைவினைப் பொருட்களின் உற்பத்திப் பொறிமுறைகளிலும் இனங்காண முடிகின்றது. அது மட்டுமின்றி வடிவியல் கோட்பாடு கலைகளுக்கு நிர்ணயித்துள்ள அம்சங்கள், அக்கலைப்படைப்பில் எத்தகைய அழகியலை உருவாக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றதோ அதனையே பன்கைவினைச் செயற்பாட்டிலும் அதே அம்சங்கள் உருவாக்குவதை மேற்படி ஒப்பீடுகளின் மூலம் கண்டறிய முடிகின்றது.

## நிறைவுறை

மனிதரின் பூர்வகால வரலாறு முதலே கலைகளும் கைவினைகளும் உருவாக்கப்பட்டு வளர்ச்சியடைந்துள்ளது. கலைகளின் அழகியலும், கைவினைகளின் பயன்பாடும் இவையிரண்டையும் வேறுபடுத்துகின்றன. காலப்போக்கில் கைவினைகளின் உருவாக்கத்தில் மேம்படுத்தப்பட்ட அலங்காரங்களும் அவற்றின் நேர்த்தியும் கைவினைகளிலும் கலைப்பெறுமானங்களை வெளிப்படுத்தின. இந்தவகையில் மட்டக்களப்பு பன்பாய் கைவினைகள் முக்கியமானவை. ஆரம்பத்தில் பன்பாய்கள் பல்வேறு வாழ்வியல் தேவைகளின் போது பயன்படுத்துவதற்காகவே உருவாக்கப்பட்டன. காலப்போக்கில் பன்பாய் உற்பத்தியில் கையாளப்பட்ட அலங்காரவேலைகள், சாயமூட்டல், வர்ணப்பிரயோகங்கள், வடிவங்கள் போன்றன பயன்பாட்டைத் தாண்டிய அலங்காரக் கலைகளாக மட்டக்களப்பின் பன்பாய் கைவினைகளைக் கொள்ளக்கூடிய நிலைக்கு உயர்த்தின. இந்தநிலை இன்று பன் கைவினைகளக் கலைக் கோட்பாட்டுத்தளத்தில் வைத்துப் பேசக்கூடிய நிலமைகளை எட்டவைத்துள்ளன. இந்தப் பின்னணியில் தான் மட்டக்களப்புப் பன்பாய்கள் வடிவவியல் கோட்பாட்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ஆய்வுசெய்யப்பட்டுள்ளது.

கலை இலக்கிய கோட்பாடுகளில் ஒன்றான வடிவவியல் வாதம், படைப்பின் அழகியலை அவற்றின் வடிவத்திற்கும் அவ் வடிவத்தில் அடங்கும் மூலக்கூறுகளுக்கும் முன்னுரிமை அளித்துப் படைப்பை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்பதை முன்வைக்கின்றது. இந்த அளவீட்டைச் செய்வதற்காக வடிவவியல் கலைக்கான சில பண்புகளையும் வகுத்துள்ளது. இந்தப் பண்புகளான சமநிலை, மூலக்கூறுகளின் இசைவு, அளவுகள், ஒருமைப்பாடு, மேற்பரப்புத்தன்மை, வர்ணம் போன்றவற்றை வைத்துக் கொண்டே கலையை மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதை வடிவவியல் கோட்பாடு பரிந்துரை செய்கின்றது.

இவ்வாய்வில் வடிவவியல் கோட்பாடு கலைக்காகப் பரிந்துரை செய்திருந்த அப்பண்புகள் பன் கைவினை உருவாக்கல் செயற்பாட்டில் கையாளப்படும் அதையொத்த பண்புகளுடன் ஒப்பாய்வு செய்யப்பட்டது. இதன்கீழ் குறிப்பிட்ட ஒவ்வோரு பண்பிலிருந்தும் வடிவியல் கோட்பாடு எதிர்பார்க்கின்ற கலைப் பெறுமானங்களை ஒத்த பெறுமானங்களைப் பன்சார் கைவினை அம்சங்களும் கொண்டிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது. இவ்வாய்வின் பெறுபேறுகள் கலைக்கும் கைவினைகளுக்குமான தொடர்புகளை நெருக்கமடையச் செய்வதோடு, பன்பாய்சார் கைவினைப் பொருட்கள் கலைப் பொருட்களாகக் கொள்ளப்படுவதற்கான ஏதுநிலைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றன எனும் முடிவையும் முன்வைக்க முடிகின்றது.

## துணை நூல்கள்

1.Gordon Graham.2005( Third edition).Philosophy of the Arts. Routeledge
Taylor & Francis Group. London and New York.

2.Berys Gaut , Dominic Mclver Lopes( editers).2005.The Routledge Companion
To Aesthetics. Routeledge Taylor & Francis Group. London and New York.

3. Leo Tolstoy (1904) What is Art? New York Funk & Wagnalls Company. New York

4.Immanuel Kant (2007). Critique of Judgement. Cosimo Classics. New York.

5. D.W. Prall (1967) Aesthetic Judgment.Thomas Y.Crowell Company.Nwe York.

6. சலீம்.ஏ.ஆர்.எம்.(1990),அக்கரைப்பற்று வரலாறு. ஹிறா பப்பிளிகேஷன்ஸ்

7.புஹாரி.என்.எச்.எம்,அப்துல் ஜவாத்.ஏ.எல்,சுபைர்.எஸ்.எம்.(2004).காத்தான்குடி வரலாறு ஓர் அறிமுகம். புள்ளிவாயல்கள், முஸ்லீம் நிறுவனங்களின் சம்மேளனம்.காத்தான்குடி

8. சனாதனன்.தா.(2020). மேற்கத்தேய நவீனவாதம் -ஓர் அறிமுகம். குமரன் புத்தக இல்லம்.கொழும்பு – சென்னை

9 கிருஷ்ணவேணி.என். (2008). இந்திய அழகியல். குமரன் புத்தக இல்லம்

10. கிருஷ்ணராஜா.சோ (2008) அழகியல், சேமமடு பதிப்பகம்,

**வலைத்தளக் கட்டுரைகள்**

www.https://study.com/academy/lesson/comparing-formalism-art-for-arts-sake.html#section-formalism – Formalisim vs Art's Sake / definition &examples

www.https://sybars.com.mx/art-history-briefing-formalism-art - Sybairs Collection@/ Art History Briefing:formalism in art

Ccedarhurst.org/formalism-and-symbolic-content - Formalism and Symbolic Content

www.https://avantarte.com/glossary/formalism - What is Formalism?/

www.https://study.com – Principles of Art / Overview & Elements- Lesson-Study.com

www.https://studiobinder.com – What is proportion in Art – 25/12/2022

www.https://russell-collection.com -What is Rhythm in Art? How Artists Creat Flow- Russell Collection

www.https://study.com. Unity in Art/ Definition,Elements & Examples- Lesson – Study.com

www.https://adobe.com- How to use contrast in art in your designs/Adobe Express

www.hppts://researchgate,net – Isuru Koswatte - NSBM Journal of management(2024 Oct 24) Promoting Srilankan handicrafts to the global

www.hppts://researchgate,net - By Annemari de Silva - International center for Ethnic studies (2019 – June) 'Craft Artisans & state institutions in Srilanka.

www.https://sjp.ac.lk - T.L.Navaratne & R.M.A.K. Ratnayake - Srilanka Economics Research Conference( SLERC) 2015. Sustainability of small scale traditional industries in Srilanka – With special reference to the handicraft industry.

(www.https://ir.lib.ruh.ac.lk) Bohingamuwa.w - Academic research sessions of University of Ruhunu- 2023.06.07. The Dumbara Craft Tradition and the Craftsmen (Kinnaras): An Ethnoarchae ological Investigation

**நேர்கண்டோர்.**

ரிபாதா.கே (25). பன்,பனை கைவினையாளர். கல்வித்தகமை - உயர்தரம். காங்கேயனோடை ஆரையம்பதி. 075 644 0090. நேர்கண்டநாள் 22.10.2024.

அஸ்கிரா அப்துல்கலாம். (35) பன்தொழில் கல்வித்தகமை-பத்தாம் வகுப்பு. மாவடி கடைவீதி, கீச்சாம்பள்ளம் ஆரையம்பதி, தொடர்பிலக்கம் 075 792 7015 நேர்கண்டநாள் 22.10.2024.

சின்ன லெப்பை கலிமா உம்மா. (75) கல்வித்தகமை-இரண்டாம் வகுப்பு. மாவடிப்பள்ளி வீதி, கீச்சாம்பள்ளம், மீரா மக்கம் பள்ளிவாசல் காங்கேயனோடை. நேர்கண்டநாள 22.10.2024. 5.

செய்யது நாச்சி. (62). பன் கைவினையாளர். கல்வித்தகமை-ஐந்தாம் வகுப்பு. காங்கேயனோடை- 12 ஆரையம்பதி. நேர்கண்டநாள் 22.10.2024.